மென்று திட்டத்தில் சேர்க்கப்பட்ட இடங்களில் புதிய டூரிஸ்ட் ஹோம் கட்டப்படும். செஞ்சியில் ஏற்படுத்துவது பரிசீலனையில் இருக்கிறது. எந்தெந்த இடத்தில் ஏற்படுத்தத் திட்டம் இருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் கூற முடியும்.

பயணிகள் விடுதி

*556 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடலூர் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் ஜோதியைப் பார்க்க வரும் யாத்ரீகர்களுக்காக வடலூரில் ஒரு டூரிஸ்ட் ஹோம் கட்ட உத்தேசமுண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : இல்லை, ஐயா.

மதிய உணவு

*557 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், வெண்பாக்கம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கொடையம்பாக்கம் பள்ளிக்கூடத்தில் மதிய உணவுத் திட்டத்தில் நடைபெற்றுள்ள ஊழல்கள் பற்றி 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் தேதியில் ஊராட்சி மன்றத் தலைவரும் ஊராரும் அரசாங்கத்துக்கு முறையீடு அனுப்பியுள்ளனரா ?

(இ) அப்படியானால் அதன்மீது அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன் : (அ) ஆம், ஐயா.

(இ) முறையீட்டில் குறிப்பிட்டுள்ள குற்றசாட்டுக்கள் கல்வி இலாகா அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு அவைகளுக்கு ஆதாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : அந்த ஆசிரியர் அப்போது உணவுத் திட்டத் தலைவராக இருந்தவருக்குத் தெரியாமலே பணத்தை வாங்கிக் கொண்டதாக அந்த வட்டக் கல்வி அதிகாரியும் யூனியன் கல்வி விஸ்தரிப்பு அதிகாரியும் ஸ்டேட்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் மூன்று மாத காலம் வரையும் அப்பள்ளியைப் பார்வையிடவில்லை என்ற குற்றச்சாட்டு தம்மீது வரும் என்ற காரணத்தால் அதிகாரிகள் மீண்டும் அவரை அழைத்து வேறு ஒரு ஸ்டேட்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். இதைப் பற்றி விசாரித்தார்கள் என்று சொல்லும்போது விசாரணையின்போது அந்த